March 1912. Registered No. M. 925.

# செந்தமிழ்ச்செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

செல்வத்துட் செல்வம் செவிச்செல்வ மச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-ஸு பங்குனி-மீ 1-உ [பகுதி-12

உள்ளுறை. பக்கம்


| | |
|---|---|
| வந்தனம் | 267 |
| குழந்தைகலியாணம் | 268 |
| திருப்பெருந்துறை விளக்கம் | 271 |
| கற்றல்வேண்டுவோன் வழிபாடுதண்டான் | 275 |
| கவிச்சமத்து | 278 |
| உருத்திரமேரூர் சரித்திரச்சுருக்கம் | 280 |
| பரோபகாரம் | 283 |
| விகடக்கூற்று | 285 |
| நட்புத்தொடர் | 286 |
| அக்ஷராவதான விடுமுறைவினா | 290 |
| புத்தகவுரை | |
| பலதேசவர்த்தமானம் | |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம், சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. தபாற்கூலி அணா. 4. | Copy Right Registered. | வெளிநாட்டுக்கு ரூ. 2. தனி சஞ்சிகை அணா. 2.

லக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

மாதிரி பத்திரிகை. 0—3—0

1—8—0

# (Supplement to "SEN TAMIL SELVAM.")

சென்னை பிரசிடென்சி காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவர்

பிரமஸ்ரீ மகா மகோ உபாத்தியாயர்

## வே. சாமிநாத ஐயர் அவர்கள்

## அபிப்பிராயம்.

சிலமாதங்களாக வெளி வந்து உலாவும் "**செந்தமிழ்ச் செல்வம்**" என்னும் பத்திரிகையைப் பார்த்து வருகிறேன்.

சிறந்த வித்வான்களது இருப்பிடமாக விளங்கிய திரிசிரபுரத்தில் இருந்த தமிழ் வித்வான் ஸ்ரீ **அமிர்தம்பிள்ளை அவர்கள்** குமாரரும், எஸ். பி. ஜி. காலேஜ் உதவித் தமிழ்ப் பண்டிதருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ அ. சுந்தரநாத **பிள்ளையவர்கள்** இப்பத்திரிகையை நடத்தி வருவதும் தக்கவர்கள் இதற்கு விஷயதானம் செய்வதும் தெரிந்து மிக்க திருப்தியடைகிறேன்.

இத்தகைய பத்திரிகை திரிசிரபுரத்தில் நடைபெற்று வருவது இன்றியமையாததே.

இத்தேசத்துக் கனவான்கள் இதனை ஆதரித்து இதன் பத்திராசிரியருக்கு ஊக்கம் அளிப்பார்களென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

**வே. சாமிநாதையன்.**

---

திரிசிரபுரம் மகா வித்துவானும் வித்வஜன சேகரருமாகிய ஸ்ரீமத் கோவிந்தக் கவிராயர் குமாரரும், பெங்களூர் சென்றல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் புலவருமான வித்துவான்

## ஸ்ரீமத் தி. கோ. நாராயணசாமி பிள்ளை அவர்கள்

## அபிப்பிராயம்.

### அகவற்பா.

மணிநெடுங் கடல்சூழ் *மாநில வரைப்பில்
அணிபெறுந் தமிழகத் தார்குறை தவிர்ப்பாள்
சோறுடைத் தாகிய சோழவள நாட்டாள்
சாறுண்டைத் தலம்பல தழுவிய பொன்னி
ஆர்சிர புரமதில் அமிர்தம் பயந்த
சீரமர் அமிர்தமாஞ் "**செந்தமிழ்ச் செல்வம்**"
தந்த வசனத் தனிச்சுவை யுண்ண
அடைமொழி கொண்டே அங்கங்குச் செல்லும்
$ தாள்பல கொண்டு சார்பவள் அகன்ற
† கூர்மை யிட்டகண் குசாக்கிர மதியள்
அமிர்தி லெடுத்த ‡ஆன நவ நீதம்
மாதம் ஒரு §முறை யாகிய வருபவள்
காதலர் மகிழக் காண்பவள் இவளை
புனருற் பவமாப் பொருந்துறச் செய்தவன்

*மாநிலம் + மால் + நிலம். $ தாள் = ஏடு. †கூர்மையிட்டகண் = மிகுந்த அச்சுமையால் எழுதிய இடம். ‡ ஆன = ஆ + ன = பசுவின். § முறை = புத்தகம்.

என்னரு மன்பன் இனியகுணச் செல்வன்
செந்தமிழ்க் கிலக்காய்த் திகழ்ந்தவன் பலநூல்
தந்தர யுக்தி தரச்செய் தாய்ந்தவன்
செந்தமிழ்த் தூதில் செய்ந்நன்றி மறவா
அன்பரை வைத்துத்தன் அகங்குளிர்ந் தார்ந்தவன்
**"அமிர்தம் பிள்ளை"** என்னுநன் னுவலன்
அருந்தவப் புத்திரன் செந்தமிழ்ப் பாவலன்
செந்நெல் விளைத்த செழுமுளை மீட்டுமச்
செந்நெலே யாவது போலத் திகழ்பவன்
பிறர்க்குப காரம் புரியும் பெற்றியன்
சைவ சமய சமரச மார்க்கன்
இலக்கிய இலக்கண மினிது பல கற்றோன்
தந்தை போலத் தருஞ்சீர புரத்தில்
எஸ். பி. ஜி. காலேஜ் இனியதமிழ்ப் பண்டிதன்
**"சுந்தர நாதன்"** என்னுந் தூயோன்
அந்தமிழ் வாணர் அறைபுக ழோனே.

## வெண்பா.

"**செந்தமிழ்ச் செல்வம்**" செழித்தோங்க நாளும்
வந்தவழி மாறாது வாழ்ந்திடுக—"**சுந்தர**
**நாதன்**" கருத்து நனியோங்க நாதனருள்
போதம் விளங்க பொருள்.

## சித்தாந்த சரபம்—அஷ்டாவதானம்,
## ஸ்ரீமத் பூவை—கலியாண சுந்தர முதலியாரவர்கள்
இயற்றியது.

திக்கிக்குஞ் சித்தாந்த மணங்கமழுந் தமிழருமை செவ்வே யோங்கப்
புத்தியினில் யாருமுல கானுபவ மாராய்ந்து பொலிவு கொள்ள
உத்தமனல் **லமிர்தசுந் தரநாத நா**வலனு முயர்விற் பன்னன்
எத்திக்கு முலவச்செய் "**செந்தமிழ்ச் செல்வம்**" வாழ்க வென்று மாதோ.

சைவ சித்தாந்த மகா வித்துவானும் தருமபுரம் ஆதின வித்துவானும் மதுரைச் சங்கத்துக்கும் சைவ மகா சமாஜத்துக்கும் முக்கிய ஆலோசனைக் கர்த்தருமாகிய திருநெல்வேலி

## ஸ்ரீமத் S. பால்வண்ண முதலியாரவர்களின்
## அபிப்பிராயம்.

"**செந்தமிழ்ச்செல்வம்**" என்னும் இப்பத்திரிகை "தமிழ் மொழிக் கடலுட்டங்கிய பல்வளப் பொருள்களையும் யாவரும் ஒருங்கே எளிதிற் பெறுதற்கமைத்த ஓர் பண்டகசாலை போன்றதாம்"; இஃது "அமிர்தம் போன்ற வசனத்தையும் கல்வியழகே தனக்கோரழகெனக் கொண்ட தலைவனையும் பெற்றுள்ளதாதலால் யாவருக்குங் களிபேருவகையளிப்ப தொன்றேயாம்."

TINNEVELLY,
1—3—12.

S. PALVANNA MUDALIAR.

# செந்தமிழ்ச்செல்வம்

ஓர் ஒருமாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பகுதி-1.] விரோதிகிருது-ஞு பங்குனி-மீ 1-உ [தொகுதி-12


## வந்தனம்.

செந்தமிழ்ச்செல்வ சந்தாதாரர்களே!

நமது அமிழ்தினுமினிய தமிழ்மொழி பயிலும் 'செந்தமிழ்ச்செல்வம்' பிறந்து தமிழுலகமும் ஏனையவுலகுங் கொண்டாடத் தனது தாமரோடு சென்று யாவரையும் இனிய வசனத்தான் மகிழ்வித்து வந்துள்ளமை எல்லாம் வல்ல இறைவனது திருவருளாலேயாம்.

இதுபற்றி யாமெல்லோரும் அவ்விறைவனது மறை மணக்கும் மலர்க்கழலைத் தொழுதுபோற்றுவாம்.

நிற்க, நமது செந்தமிழ்ச் செல்வம் என்னுஞ் செல்வி வளர்ந்து ஓராண்டு முற்றுறுதற்குச் சந்தாதாரர்களாகிய உங்களன்பே காரணமாம். நீங்கள் அன்போடனுப்பிய செல்வமென்னுஞ் செவிலியே நமது செந்தமிழ்ச்செல்வத்தை வளர்த்துவந்ததென்பது மூக்காலுஞ்சரதம்: இதுபற்றி உங்களனைவர்க்கும் வந்தனமளிக்கின்றேம், நன்றி பாராட்டுகின்றேம்.

இனி இரண்டாவது ஆண்டுற்று இரட்டைப் பிராயத்தினளாய் முன்னினும் வனப்புநடையுமிக்குப்பாவலர்மொழியாம் உடைபூண்டு உங்கள்பாலெல்லாம் வந்துலவி நன்மொழி கிளக்குவள். நீங்களும் அவளை விரும்பிப்போற்றி மகிழும் புகழும்கொண்டுவிளங்க வேண்டுகின்றேன்.

இவ்வருடம் சிலசமயம் நமது செந்தமிழ்ச் செல்வம் தேதி தாமதித்து வந்ததென்றாலும் அவ்வவ் மாதச் சஞ்சிகை அவ்வவ் மாதத்திலேயே தவறாமல்வந்தவிஷயம் அன்பர்கள் அறிந்ததே. தெய்திதாழ்த்தாலும் மாதம் என்றும் தாழ்த்ததில்லை. நமது செந்தமிழ்ச் செல்வத்திற்கு சொந்தத்தில் அச்சுக்கூடம் ஏற்படுத்த சில பிரபுக்கள் உதவி செய்வதாக வாக்களித்திருக்கின்றனர். அது திருவருளாற்கைகூடின் எப்பொழுதும நாள்மட்டுமெல்ல கணமுந் தவறாதுவரும். பிரபுக்களே! இதனை ஆதரிப்பது தமிழ் நாட்டினோராகிய உங்கள் கடமையே.

* இனி, புதுவருடமாகிய பரிதாபிவருடம் சித்திரை மாதம் வெளிவரப்போம் செந்தமிழ்ச் செல்வம் புத்தகம் இரண்டின் சஞ்சிகைகள் ஒன்றுமுதல் பனிரெண்டையும் முறையே பெற்றுப் பயன் அடைவதோடு தமிழையும் வளர்த்து நாட்டுக்கு நன்மை யூட்டவும் எமக்கு ஊக்கமூட்டவும் வேண்டுகின்றேன்,

பத்திராதிபர்.

---

## குழந்தை கலியாணம்.

---

இவ்விஷயத்தைப்பற்றித் தற்காலத்திய கல்விகற்ற ஆண் பெண் பாலர்கள் மிகக் கவனிக்கின்றார்கள். சற்றேறக்குறைய 200-வருடங்களுக்கு முன் நம் நாட்டில் குழந்தைகளுக்குக் கலியாணங்கள் செய்யுமேற்பாடிருந்ததாகத் தோன்றவில்லை. மகமதியருடைய ஆளுகை நம்மநாட்டில் பிரவேசித்து விவாகமில்லாத சிறுமிகளை யபகரிக்கக் கருதிய மகமதிய வரசர் கொடுங்கோன்மைக்காகப் பயந்த ஹிந்துக்கள் தங்களதுப் புத்திரிகளுக்குப் பால்ய விவாகங்கள் செய்விக்கத் தொடங்கிய வழக்கமானது இன்னும் நம்மவர்களை விட்டுவிலகவில்லை. இப்போது சிறந்த ஆங்கிலாளுகை நம் தேசத்தில் நிலைகின்றிருப்பதால் நம்மவர்களுக்காகவேண்டிய வெல்லாச்சீர் திருத்தங்களும் சுலப சாத்தியமாக முடிவேறுகிற தென்பதை யறியாதோரில்லை. இப்படிப்பட்ட சமயத்திலும் சிலர் குழந்தைகலியாணத்தை விரும்பிப்பலவாறு

துயரமடைகிறார்கள். குழந்தைப்பருவத்தில் கலியாணம் செய்விப்பதினால் அக்குழந்தைகள் கலியாணத்தின் கருத்தும் காரணமுமறியாமல் அவர்களது விளையாட்டுவிஷயங்களி லிதுவொன்றெனநினைக்க வேண்டியவர்களாயும், கலியாணத்துக்குரிய நிபந்தனைகளையு மறியாமலிருக்கிறார்கள் இதனாற் பயனென்னை? இத்தகைய குழந்தை கலியாணத்தைப்போற்றும் சாஸ்திரிமார்களது விவேக சூன்யத்தை யென்னென்போம். குழந்தைக் கலியாணங்களினால் விதவைகளாயிருக்கும் சிறுமிகளின் எண்ணதிகம். மேலும் வியபசாரங்களினால் நேரிடும்அவமானங்களு மிங்கெடுத்துக்கூற நாவெழவில்லை. இக்கொடிய குழந்தை கலியாண வழக்கம் பெரும்பாலும் அந்தணர்க்குள்ளும், அவர்களைக் கண்டு நடிக்கும் சிலஜாதியார்க்குள்ளுமே பெருகிக் கஷ்டத்தை யுண்டாக்குகின்றது. இக்கஷ்டத்தையனுபவிப்போர்கள் குழந்தைக்கலியாணத்தை வெறுப்பவர்களாயிருந்தும் சுகந்தாதவழக்கத்தைவிட அஞ்சுகின்றனர்கள். ஆயினும் சிலர் தங்கள் அருமையானபுத்திரிகள் ருதுவாகும் வரையில் கலியாணஞ்செய்யாமலே வைத்திருக்கிறார்கள், ருதுவாயும் மணமகன்கிடைக்கும் வரையில் ருதுவாகவில்லையெனக்கூறத்துணிவதையுமறியலாம். இம்மர்மங்களைச் சில கௌரவ குடும்பங்களில் சாதாரணமாகக்காண்க. இதனால் குழந்தைக்கலியாணவழக்கம் கொடியதென்றே யூகிக்கத்தக்கதாயிருக்கின்றது. குழந்தைக்கலியாணத்துக்குறிய சாஸ்திரங்களும், அவற்றைப் பரிந்து வாதாடும் சாஸ்திரிமார்களும் தற்காலத்தில் அயர்ந்திருக்க நேரிட்டதல்லவா? பெண்கல்விபரவியவிடங்களில் குழந்தைக் கலியாணவழக்கம் தவறுதற் கென்னதடை? கல்விகற்ற மாதர்கள் இக்கொடிய குழந்தைகலியாணத்தைக் கழிக்காதிருப்பார்களே யாகில் அவர்கள் கற்றகல்வி யாது பயனை விளைவிக்குமோ? ஒருக்கால் புருஷர்கள் மணமகனால் பொருளையும், அநுகூலத்தையும் பெறத் தங்கள் அருமையான சிறுமிகளைக் குழந்தைப்பருவத்தில் விவாகம்புரியத்துணிவரேல் கற்றமாதர்கள் மறுப்பார்களென்றேயாம்நம்புகின்றோம் இப்படிப்பட்ட குழந்தை கலியாணத்தாலுண்டாகும் எண்ணிறந்த கொடுமைகளை நிவர்த்திக்க வேண்டுமென்று சீர்பெற்ற மைசூர்மகாராஜா அவர்கள் தமது ஹிந்து சமயத்தைச்சார்ந்த மந்திராலோசனை அங்கத்தவர்கள் சம்மதப்படி குழந்தைக்கலியாணத்தையகற்ற சட்டத்தை யியற்றியிருப்பது லோகப்பிரசித்தம். இச்சட்டத்தால் குழந்தைக்கலியாணங்கள் சிலவருடங்களாக நின்றுவிட்டன இவ்விதிக்கு விரோதமாக நடப்பவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்

டே வருதலைபறியலாம். இப்படிப்பட்டவுத்தமவிஷயேசரியென மற்ற ஹறிந்து வரசர்களும் தங்களது நாடுகளில் பயன்படச் செய்யக் கருதி யிருப்பதாகக்கேழ்விப்படுகிறோம், இந்த உத்தமச்செயலே நம்மவறிந்து ஜனங்கள் கவனித்தல் அவசியம். நம்மவர்களுக் கவசியமான சீர்தி ருத்தங்களை உணர்ந்து நம்மவர்களே கைப்பற்றுவிடில் அவற்றால் நேரி டும் நஷ்டங்களை நாமே யனுபவிப்பவர்களாவோ மல்லவா? பழயன கழித்தும் புதியனப் புகுதலே மனிதர்க்குறிய அறிவின் விளக்கம். இதைத் தகர்க்க முடியாது என்பதை மானிட இயற்கை நூலையறிந்த விவேகிகளறிவார்கள். இப்படிப்பட்ட ஆசார சீர்திருத்த சங்கத்தின் அங்கத்தவர்களது முயற்சிகளனைத்தும் நற்ளேறப் பயன் தருமென்க, மேலும்மற்றோர் கருத்து மிங்குக் கூறவேண்டியதா யிருக்கின்றது. அதாவது நம் நாட்டில் மாதர் சங்கங்கள் இரண்டொரு நகரங்களில் ஸ்தாபனையாயிருந்தும் அச்சங்கங்களின் மாதுஸ்திரீகள் பிரஸ்தாபக் குழந்தைக் கலியாணங்களைப் பற்றிக் கவனித்து இந்தயடியோடகற் றும்படியான முயற்சிசெய்து வருவதாகத் தோன்றவில்லை. இதற்காக யாம் வியசனிக்கின்றோம். கல்விகற்ற மாதர்கள் இக்கொடிய வழக்கத் தைக்கழித்துத் தங்கள் குழந்தைகளைச் சீர்படுத்தத்துணிவார்களே யாகில் நற்கீர்த்தி யடைவார்களென்று ஞியாபக மூட்டுகின்றோம். தவிர குழந்தைக்கலியாணங்கள் நடக்குமிடங்களுக்குப் போயவற்றை யபிமானியாமலிருக்கும் கட்டுப்பாட்டை நிலைநாட்டல்அவஸ்யமென்று ஏச்சரிக்கின்றோம்.

திருகரன்.

# திருப்பெருந்துறை விளக்கம்.

(220-ம் பக்கத்தொடர்ச்சி.)

இவ்விடந்தான் முற்காலத்தில் பாண்டியவரசன் சோதித்தவிட மென்றும் பூமியின் கீழிருந்து ஜலப்பெருக்குண்டானது அவ்விடமே யென்றும் இந்நகரிலுள்ள எழுத்தறியாமேழைகூட கர்ணபரம்பரை யாக நாளைக்குஞ் சொல்லி வருகிறன். இவ்வாறு திருப்பெருந்துறை யென்னும் பெயரடைந்த இத்தலத்துக்குச் சிவபுரமென்றும் பெயரெய் தியிருப்பதினாலே, சிவபுரனே, சிவபுரத்தரசே, சிவபுரநகர்புக்கு எனப் பலதடவை திருவாசகத்தில் மாணிக்கவாசகசுவாமிகள் இத்தலத்தைக் குறிப்பிட்டுத் தோத்திரஞ்செய்திருக்கிறார்கள்.

ஆங்கில நாட்டாரும் உலகத்தின் பூர்வகாலத்துச் சரித்திரங்க ளைத்தேடித்தேடிக் கற்றுணர்ந்தவரும் தமிழில் மஹா பண்டிதரும் புறமதத்தவருமான ரிவரண்ட் ஜி. யு. போப்பையாவர்களும் தாம் ஆங் கில பாஷையில் மொழிபெயர்த்த திருவாசகப் புத்தகத்தின் முகவுரை யிலும்; திருவாசக மொழிபெயர்ப்புப் புத்தகத்திலும், இக்காலத்தில் திருப்பெருந்துறை ஆளுடையார் கோயிலென்னும் பெயராலழைக் கப்பட்டு வருவதாயும் அது தஞ்சாவூர் ஜில்லாவில் புதுக்கோட்டையி லிருந்து 27 மைல் தூரத்திலிருப்பதாயும் அத்தலத்தில் மாணிக்கவா சகசுவாமிகள் திருவுருவம் வைத்து ஆராதிக்கப்பட்டும் வணங்கப்பட் டும் வருவதாயும் ஹீப்ருபாட்டுப் பாடகர்களும் தீர்க்கதரிசிகளும் அக்காலத்தில் * ஜெருசலேம் நகரத்தையெவ்வாறு கொண்டார்களோ அவ்வாறு மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தைக் கொண்டிருந்த தாகவு மெழுதியிருக்கிறார்கள். இதுகாறுங் காட்டிய சுருதி யுக்தி அனுபவமாகிய பிரபல பிரமாணங்களால் துறை யென்ற மொழி (Harbour or Port) கப்பலிறங்குங் கடற்றுறைப் பட்டினமென்றெவ்விதத் திலும் பொருள் படவாவென்றும் ஆளுடையார்கோயிலென்னுந் தல மே திருப்பெருந்துறை யென்றும் எவ்வகையாலும் மறுக்கக்கூடாவகை யுராய் மலையிலக்காய்க் காட்டப்பட்டது. இனியும் விரிவஞ்சிவிடுத்து

* இது நாம் வசிக்கும் பரதகண்டத்துக்கு வெளிப்பட்டு மேற்கே வெகு தூரத்திலிருக்கிறப் பலஸ்டின் நாட்டிலுள்ள ஓர் பூர்வீக நகரம் இந்நகரத்துக்குச் சமீபமோர் சிற்றூரில் கிருஸ்துநாதர் ஜெனனமானார் அவர்பாடுபட்டுமரித்தது இந்நகரத்தில்.

மேற்சங்கதிகளை ஆராயப்புகுவாம். ஐயரவர்களும் பிள்ளையவர்களும் இவர்களுக்குப் பரிந்து பேசுபவர்களும் மேற்காட்டியவைகளை ஆழ்ந்து கருதி ஆட்சேபமுளதேல் அவைகளை யிச்செந்தமிழ்ச் செல்வன் மூலமாய் வெளியிடுவார்களேயானால் உலகோர்க்குபகாரமாயிருக்கும்.

இனி நம்பியார் அருளிய திருவிளையாடற் புராணத்தில் திருப்பெருந்துறையைக் குறிப்பிடும்போது "தாவுமாவிறங்கு பட்டினம்" எனச்சொல்லியிருப்பதுபோல் ஐயரவர்கள் சொல்லுமிரண்டாங்கூற்றைக் கூறுபடுத்தி யாராய்வாம். தாவுமாவிறங்கு பட்டினமென்பதற்குக் குதிரைகள் இறக்குமதி செய்யுங் கடற்றுறை முகப்பட்டினமெனப் பொருள்படுவதுண்மையே. ஆனால் இந்த வாக்கியத்தால் திருப்பெருந்துறையைத்தான் புராணிகர் குறிப்பிட்டுக்கூறினாரென்பதை விசாரிக்கவேண்டும். தாவுமாவிறங்கு பட்டினம் என்ற வாக்கியம் நம்பியார் திருவிளையாடல் உஎ-ம் படலம் சஅ-வது செய்யுளில் காணப்படுகிறது. அச்செய்யுளாவது.

"பகர்ந்தனர் வந்து பரித்துறையாளர் பரிவுறு நம்பரியனைத்து
மகந்தருநோயால் வீந்தனவென்றே யறைபட்டுங்காசணிதூசுந் [துப்
தரும்பெருங்கனகம் வேண்டுபவெடுத்துத் தாவுமாவிறங்குபட்டினத்
புகுந்துயர் பரிகொண் டடைந்திட வேண்டும் பூவிறா விலக்கணத்தி
(னையய"

வென்பதே இச்செய்யுளில் பாண்டியவரசன்றனது போர்க்குதிரைகள் குறைந்திட்டதைக்கண்டு (மந்திரியையழைத்து) வேண்டிய திரவியங்களை யெடுத்துக்கொண்டு தீவாந்தரங்களிலிருந்து குதிரைகள் கப்பலில் வந்திறங்குங் கடற்றுறைப் பட்டினத்துக்குச் சென்று குதிரைகள் வாங்கிவரவேண்டுமென ஆக்ஞாபித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது இன்ன பட்டினத்துக்குச் செல்லும்படி ஆக்ஞாபித்ததாக இச்செய்யுளில் குறிப்பிட்டுக் கூறவில்லை. குதிரைகள் வாங்கச்செல்லும்படி வாதபுரீஸ்வரருக்கும் பாண்டியராஜன் உத்திரவு கொடுத்தபோது, பாண்டியராஜன் மனசிலாவது அல்லது அரசன் உத்திரவுப்படி குதிரைகள் கொள்ளப் பிரயாணமாகிச்சென்று திருப்பெருந்துறையை யடைந்தவரா வாதபுரீஸ்வரருக்காவது திருப்பெருந்துறையெனும் நகரத்தின் பெயரே ஞாபகத்திற் சற்றுமிருந்ததில்லை யென்று மேற்கண்ட உஎ-ம் படலத்தைத் தீர்க்கமாய் ஆராய்ந்தால் தெளிவாய் வெளியாகும் ஷை உஎ-வது படலம் உகூ-வது செய்யுளின் ஈற்றில், வாதபுரீஸ்வரர் இவ்வாறு குதிரை கொள்ளப் "புறப்பட்டார் மதுரை

யைவிட்டு" எனவெடுத்துக்கொண்டு ந௧-து செய்யுளின் பிற்பாதியில் "மேனுறுசாபந்தீர விந்திரன் வெள்ளையானை, காலை வந்திறைஞ்சுந் தொல்லைக்கானையம் பதியடைந்தார்" என்று முடித்து ந௨-வது செய்யுளினால்

"கருதுமப்பதியைவிட்டுக் காதங்கள்பலவுநீங்கி
வருநெறிவசத்தினானு மாசின்முற்றொடர்பினாலும்
அருள்புனைவாதவூரான் புடைச்சம்புவர்மூந் [தார்"
திரைபெருமொய்யார் பொய்கைத் திருப்பெருந்துறையைச்சேர்ந்

திருப்பெருந்துறையை யடைந்தாரென அருளப்பட்டிருக்கிறது இதுவென்ன வாச்சரியம். நமது கவிநாயகனாகிய பெரும்பற்றப்புலியூர் நம்பியார் தமக்குப் பிற்காலமாகிய கலி முதிர்ச்சியில் மேலதுகீழ் கீழதுமேல் என வெல்லாந் தடுமாறுமென நினைத்தோ அல்லது முற்றறிவுள்ள திருவருளுநன் னின்றுணர்த்தியதாலோ மேல்கண்டவாறு விவரித்துள்ளார். இவற்றால் திருவாதவூரர் குதிரைகளிறங்குங் கடற்றுறைப்பட்டினத்தை நோக்கி மதுரையைவிட்டுப் பிரயாணமாகி மதுரைக்குக்கிழக்கே சுமார் ௪௰-மைல் தூரமுள்ள காளையார்கோயிலென்னுந் திருக்கானப்பேரென்னுஞ் சிவதலத்தையடைந்து அங்குஒருநாள் விஜயஞ்செய்து மற்றைநாள் அத்தலத்தை விட்டுப் பிரயாணமாகிக் கடற்றுறைப்பட்டினத்தை நோக்கிச்செல்லுகையில் இனிநடக்கவேண்டிய காரியங்களினாலும் வாதவூரருடைய முந்திய ஊழின் றொடர்ச்சியாலும் சிவபிரானெழுந்தருளியிராநின்ற திருப்பெருந்துறைத் தலத்தையடைந்ததாக வேற்படுகிறது. இதினால் திருப்பெருந்துறை யென்றதலம் மதுரைக்குக் குணதிசையின்கணுள்ளதெனப் பசுமரத்தாணியறைந்தாற்போல் ஸ்தாபிதமாய்விட்டது. இப்புராணமோ சுமார் அறவருடங்களுக்குமுன் உண்டானதென ஐயரவர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள், இப்புராணத்தைவிட்டுப் பரஞ்சோதியாரருளிய திருவிளையாடற்புராணத்திலாவது நமது ஐயரவர்கள் சொல்லுகிறபடி திருப்பெருந்துறையைக் குறிப்பிட்டுச் சொல்லும்போது வேலையந்துறையெனச் சொல்லப்பட்டிருக்கிறதா வென்பதைப் பார்ப்போம். பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணம் ௫௮-வது படலம் ௨௰-வதுசெய்யுளில் ஐயரவர்கள் எடுத்துக்காட்டிய "வேலையந்துறை" யென்றதொடர்பதும் காணப்படுகிறது. இவ்வியாசத்தை வாசிப்போர் சுலபமாயறியும்வண்ணம் அச்செய்யுள் பூர்த்தியாயடியில் எழுதப்படுகிறது.

"மன்றல் வேம்பனும் வாதவூர் வள்ளலை நோக்கி
யின்றுநீர் நமதறை திறந்திரு நிதியெடுத்துச்
சென்று வேலையந்துறையில் வந்திறங்குவ தெரிந்து
வென்றுவாம் பரிகொடு வரப்போ மெனவிடுத்தார்."

என்பதே பாண்டியன் வாதவூரரை நோக்கி வேண்டிய திரவியத்தை யெடுத்துக்கொண்டு பிரயாணமாகிக் கடற்றுறையில் குதிரைகளிறங்குவதைத் தெரிந்து குதிரைகள் வாங்கிவரும்படி யனுப்பினனென்று இச்செய்யுளிலும் பொருள்படுகிறதே யொழிய திருப்பெருந்துறையென்ற தலத்தை "வேலையந்துறை" யெனக் கூறியுள்ளதாகக் கொஞ்சமுங் கருதவிடமில்லை. நம்பியார் திருவிளையாடற் புராணத்திற் கூறியுள்ளவண்ணம், பெருந்துறையை வாதவூரரடைந்தவரை அவருக்குப் பெருந்துறைக்குச் செல்லவேண்டுமென்கிற வெண்ணமே யில்லையெனவித்தாலும் வெளியாகிறது. பிறகு ௨௯-வது செய்யுளில் "பெருந்துறையை யடைந்தார்" எனத் திருப்பெருந்துறையென்கிற தலப்பெயர் பிரஸ்தாபிக்கப் படுகிறது. இப்புராணத்திலும் ஐயாவர்கள் கொண்ட கருத்துக்கிணக்கமான ஆதரவுஞ்சற்றுமில்லையெனத் துலக்கமாயிற்று.

ஐயாவர்கள் கூறியுள்ள மற்றொருசாட்சியாகிய பூமியைச்சூழ்ந்த ஆழமான சமுத்திரக்கரையெனப் பொருள்படும் "நெடும்புவி சார்தரு மாழ்கடலின்கரை" யென்றவாக்கியமாவது திருப்பெருந்துறையென்ற தலத்தைக் குறிக்கின்றதா வென்பதை விசாரிப்போம். இவ்வாக்கியம் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்தி லிருக்கின்றதுபோல நம்மையாவர்க ளெழுதியிருக்கிறார்கள்; இப்புராணம் முற்றுந் தேடியும் ஐயாவர்கள் பக்கஞ் சான்றுரைத்தல் அசத்தியமெனக் கொண்டு அப்புராணத்தைவிட்டு நீங்கியதுபோல அவ்வாக்கியம் அப்புராணத்திற் கிடைக்கவில்லை. சம்மந்தப்பட்ட மற்றநூல்களிற்றேடியதில் திருவாதவூரர்புராணம் மந்திரிச்சருக்கம் ௨௯-வது செய்யுளில் இவ்வாக்கியங் கண்டுபிடிக்கப்பட்டது. அச்செய்யுள் வருமாறு.

"தாதகிமார்ப னெடும்புவி சார்தரு மாழ்கட லின்கரை
தீதிலமாது ரகங்கொடுசேர்கெழு மாரியர் வந்தனர்
ஏதமிலாயது கண்டன மியாமென வேகொடு தன்பொடு
மேதினிகாவலன் முன்சிலமேதகு தூதர் விளம்பினர்."

(இன்னும்வரும்.) திரு. சாம்பசிவம் பிள்ளை.

Retired Sub-Magistrate, Trichy.

# கற்றல் வேண்டுவோன் வழிபாடு தண்டான்.

### இருவிகற்ப நேரிசை வெண்பா.

*தந்திமுகத் தானைத் தயையுடைநற் புண்ணியனைச்*
*செந்திலமர் சேயோற்கு முன்னோனைச்—சிந்தித்*
*தவன்றுணைத்தா ளன்புமிகப் போற்றுவமென் புன்மொழிசே*
*ரிவ்வியாச மேதமுறா வாறு.*

உலகில் மனிதராய்ப் பிறப்பெடுத்த பின்பு தம்முயிர் பரிசுத்தமாதற்பொருட்டுப் புண்ணிய பாவங்களை யறிவிக்கின்றனவாயும், பொறை, நல்லொழுக்கம், அறம், அடக்கம் முதலிய நற்குணங்களொருங்கே அமைதற்குச் சாதனமாயும். ஐம்பொறி யடக்கியாளுதலும், அடக்காவழித் தன்மனத்திற் குறுத்துந்தீமையுமாகிய தன் இயற்கையறிவை மென்மேலு முயர்த்தி ஞானமுண்டாதற் கேதுவாயுமுள்ள நூற்கேள்விகளைக் கற்கப்புகுபவன், கருணையுந்தெய்வபக்தியும், நூற்களிற் பல்காற்பயின்றதனாலாய தேர்ச்சியோடுற்ற சொல்வன்மையும் பக்ஷபாதமின்றி யாவரிடத்தும் ஒருதன்மை பாராட்டு முயர்குணமுள்ளநல்லாசிரியனை நாடியடைதல் வேண்டும்.

'குருவில்லா வித்தைபாழ்' என்று ஆன்றோர் கூறியதனால், கல்வி பயிலவிரும்புவோன் சற்குருவினிடத்துப் படித்தேதீரவேண்டும் இன்றேல் 'குன்றுமுட்டிய குரீஇப்போல' மாணாக்கன் இடர்ப்படுமென்க, தானே சுயமாகக் கற்றலில் பல ஐயந்திரிபுகள் நேர்தலாலும், தக்க ஆராய்ச்சியின்றி மனமழுங்கு மாகலாலும் 'தனக்குப்பாழ் கற்றறிவில்லாவுடம்பு' என முதியோர் கூறுமாற்றானும் நல்லாசிரியற் சார்தலின்றி யெடுத்த கருமங்களொல்லா.

நூல்பயிலவிரும்புபவன் தன் ஆசிரியற்குச் செயக்கடவ வழிபாடுகளைச்சிறிதே பகர்வன். கல்விச்சாலைக்குக் குறித்தநேரத்திற்சென்றும் தன்மனத்தில் எள்ளளவு மாசின்றிக் குரு போதிக்குங்கால் வெறுப்பின்றி உண்கலத்திட்ட அடிசிலை யுண்ண அவாக்கொளு மொருவன்போல, மிக ஆசையுடன் அவர் கூறுமொழிகளைச் செவிசாய்த்து மனத்துப் பதிய வைத்துக்கொண்டு மீண்டு மவர்கேட்கும் வினாக்களுக்குத் தன்னறிவிற் கேற்ப விடையளித்தும் 'இத்தகை யாசானையடைய எத்துணைத் தவம்புரிந்தேனோ' என்றவரைப் புகழ்ந்துரைத்தும் வழிபாடுசெய்வதிற் சிறிது மனஞ் சலியாதவனுமாகிய இன்னோ

ஏன்ன குணங்கள் உளனுயிருக்கவேண்டும். மற்றுங் குளிர் காய்பவன் அனலைவிட்டு நீங்காமலூ மிகநெருங்காமலும் குளிர் காய்வதைபோன, ஆசிரியரை மிகநெருங்காமலும் விடாமலும் பின் தொடரவேண்டும். அன்றியும் அவர் இன்புற்றுங்குத் தானும் இன்புறுதலூ மோரோர் வழித் துக்கப்பட்டுழித் தானுமதைத் தனதாகப்பாவித்துத் துயருறு தலுமன்றி அவருள்ளத்திற் கொருபோதும் மாறுக நடந்துகொள்ளல் ஆகாது. மற்றுமவரைத் தெய்வமாகப் பாவித்துத் தெய்வத்துக்கஞ்சு வதுபோல ஆசிரியர்மாட்டு அஞ்சியடங்கி யன்னுரை மனமுறக்கொண் டாடவேண்டும். சுவை சொட்டச்சொட்டப் பாடிய குமரகுருபரசுவா மிகளும் 'அறவோர்க் கடிதளேதெய்வ' மெனத் திருவாய்மலர்ந்துளர். ஆசிரியரை இடையறுதெழுகின்ற அன்பென்னுந் தளேயாற் பிணிக்க வேண்டும். பின்னர் என்றும் அத்தளேயிடையே அற்றுப்போகா வண் ணம் பாதுகாத்து வரவேண்டும். உண்மையில் மனமாரத் தன் ஆசா னுக்குக் குற்றேவல்புரிந்து அவர் மனமறிந்தொழுகு மாட்சியிற் பிறி தோர் சிறந்தபொருள் ஒருமாணவனுக்கியாது? சிலர் கல்வி கற்பிக் குங்குருவை யதிகமாகப் பாராட்டாது, அவர் ஏவுந் தொழில்களைப் புரியத் தாங்கடமைப் பட்டவரல்லரென்று வீண்வாதமியம்புகின்றனர் அன்னுர் கூறுவது பயனில் கூற்றேயாம். பெரும்பான்மையு மிக்கா லத்து இவ்வழக்கு இல்லாதிருப்பினும் மாணவத் தன்மை கெழீஇய எவ்வெவரும் மேற்கூறியவாறுஒழுகவேண்டுவது இன்றியமையாமை யென்பதே எம்மனோர் துணிபு. என்னே? அவர் செய்யுங் கல்விப்பொ ருளுதவி நித்தியமாகிய உயிரைப்பற்றிநின்று அறிவைவளர்த்து அழி யாதமேலாய இன்பத்தை யளிக்க ஏதுவாதலினுலெலன்க. உண்மையா கக்கல்வி வேண்டியிருப்போன் மேற்கூறிய வழிபாடுகளைத் தன் ஆசி ரியருக்குச் செய்யச்சிறிதும் பின்வாங்கான். ஏனெனில் தன்னியற்கை அறிவு கல்வியின்மேல் உளதாய பேரவாவினுலும் அதற்கு மூலாதார மாயுள்ளவர் ஆசிரியராதலாலும் அவர் முகமாகத் தனக்குப் பல நன் மைகளும் நற்குண நற்செய்கைகளும் அமைதலாலுமென்க. உதாரண மாகத் துரோணரிடத்துப் பாண்டவர்கள் ஐவரும் அவரிலு மருச்சு னன் நடந்துகொண்டதும், விசுவாமித்திரரிடத்து மிக விசுவாசமாக இராமர் ஏவற்றொழில்களை மேற்கொண்டதுங் தக்க சான்று பகர ஏது வாயிருக்கின்றன. சிலர் ஆசிரியர்கடைப்பட்ட சாதியாரென்றுஎண்ணி யவருழைக் கல்விபயில மயங்கி வழிபடப் பின்னிடு கின்றனர். அது சால்வுங் குற்றமாகும். ஏனெனில்

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு."

என்று நாயனாரும்

'உடல்வயத் தாகுஞ் சாதி யுயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற வுயிரி னோடு செல்லுறுங் கல்வி தம்மா
லடர்தரும் பெருமை யெய்தா ராதலா லகக்கண் ணாகித்
தொடர்புறுங் கல்வி கல்லாத் தொழிலினை விடவே வேண்டும்,

என்று விநாயகபுராண முடையாருங் கூறிய 'பிறப்பால் வருஞ் சாதியுயர்ச்சியினு முயற்சியால் வருங்கல்வி யுயர்ச்சியே பெரிது' என்னுந் தெளிவாகிய தெய்வவாசகத்தால், இப்பின்னிடுமேழையர் நன்கு தெளிந்து கற்றோரே மேலானவர்களின் சாதி தாழ்வு நோக்காது அவர்மாட்டுச்சென்று கல்வி பயிலக் கடவர். தோணியியக்குபவன் கடைப்பட்டவனாயினும் அவன்றுணையாக ஆற்றைக் கடத்தல் மான, நூல்கற்றவன் கீழ்ச்சாதியனாயினும் மேலாக எண்ணி யவனுழைக் கல்விகற்கவேண்டும்.

முன்பு ஏகலைவன் என்பானொருவேடன் துரோணரை யடுத்துத் தனக்குக் கல்வி போதிக்கும்படி வேண்ட, துரோணர் 'எனக்கு அவகாசமில்லை யான் எங்ஙனம் போதிப்பல்' என்றதற்கு வேடன் தன்மனைக்கேகி, ஓர் சிலம்பக்கூட மியற்றி அதில் துரோணரைப்போல் ஓர் உருவமைத்து அதை ஆசிரியராகப் பாவித்து வைகலுந்தொழுது வித்தைகைவருமாறு தியானித்து வந்தனைவழிபாடுகளிற் சிறிதேனுந்தவறாது நடாத்தாலன்றோ அருச்சுனற்குச் சமானமான விற்றிறமுற்றனன். இதனை வில்லிபாரதம் (வாரணாவதச்சருக்கம் செய்யுள்-50)

'ஏகலைவ னென்றொருகி ராதன்முனி யைத்தனியி றைஞ்சியிவ
னேவலின்வழா, ஞகலைய டைந்துமிகு பத்தியொடு நாடொறும ருச்
சுனனை யொத்து வருவான், மேகலையொ டுங்கடல்வ ளைந்ததா ணிக்க
ணொருவில்லியென வின்மை யுடையான், மாகலைநி றைந்துகுரு தக்கி
ணைவ லக்கையினில் வல்விரல்வ ழங்கி யுளனால்.'

என்னும் பாடலால் நன்கு தெளிக.

ஆதலால் வழிபாடு செய்வதில் மனஞ் சலிப்பில்லாமலிருந்து ஆசிரியன் வழியொழுகினால் அவன் முடிவிற் சிறந்த பண்டிதனாவானென்பதிற் சிறிதும் ஐயமில்லை. கற்றலில் மிகவுமாசையுற்று வழிபாடு தண்டாத மகான் அருளைய சுவாமிகளென்பார் தம்மாசிரியராகிய ஸ்ரீ தாயு

மானசுவாமிகள் தம்முடலை நீத்து சிவைக்யமுற்றபோது அவரை மிக வணங்கி குதித்தோடிப் பாடித்துதித்ததே அவர் மாணுக்கத் தன்மையையும் வந்தித்த வழிபாடுகளையுந் தெள்ளிதிற்காட்டச் சாதனமாயுள்ளன. வழிபாடு சிறந்தானொருவன் மிகவுங் கற்றோனாய்ப் பலர்க்குமுபகாரியாய் உலகத்தாரால் மிக மேன்மையாக மதிக்கப்பட்டு இம்மையில் மிக்க புகழ்பெற்று மறுமையில் அழியாத நித்தியானந்த இன்பத்தை நுகர்ந்துகொண்டிருப்பான் என்பதில் எட்டுணையும் ஐயமின்று.

ஆகவே யாவரும் வழிபாடியற்றலை உயிரினுமோம்பல் ஆத்தியாவசியம் சுபம்.

புனைந்த கவியிலும் வரைந்த வியாசத்திலும் பிழைபல
விருப்பினு முலகம் பொறுக்க.

இங்ஙனம்.

சே. ரா. தீம்மப்பையன்.

பாலசந்திர பண்டிதன்.

## கவிச்சமத்து.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சபைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

செந்தமிழ்ச்செல்வத்தைக் கண்ணுறும் செல்வர்களே! புலவர்களின் பெருமையைப் புலவரேயறிவர். புலவர் பெருமையைப் பிறரறிதல் யாங்ஙனம்? பிள்ளை பெறுந்துயர் மலடி யறிவாளா.

புலவர்கள் தம்மிளமை தொட்டு நல்லாசிரியரை யடுத்து காலமெல்லாம் கல்விக்கடலிலே திளைந்து நெஞ்சு புண்ணாகக்கற்று விளங்கும் பெருமை கல்லாதார் அறிதல் கூடுமா?

கற்ற புலவர்கள் தம் அறிவின் வன்மையால் கவிகளைப் புனைகின்றனர். அக்கவியின் வனப்பு முதலியவற்றைப் பிறர் காணற்கில்லாதிருப்பது பரிதாபமல்ல அதனையும் அசட்டை செய்து நிந்திக்கவும் வருகின்றனர். இஃதன்றோ பரிதாபத்திலும் பரிதாபம்.

இது பற்றியன்றோ இரட்டைப்புலவர்களும்

மூடர்முன்னே பாடல் மொழிந்தா லறிவரோ
ஆடெடுத்த தென்புலியூ ரம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபயன்
அந்தகனே நாயகனு ஞல். என்ருர்.

இதன் பொருள். தெற்கேயுள்ள புலியூரென்னும் சிதம்பரத்தில் நடனஞ்செய்யும் அம்பலவா! மூடர்முன்னே சொற்சுவை பொருட்சுவை முதலிய சுவைகள் மிகுந்த பாட்டை மொழிந்தால் அறிவர்களோ! எப்படி ஒரு பெண்ணைத் திருமகள்போல் சிங்காரித்தாலும் புருஷன் அந்தகனுயிருந்தால் அந்தச் சிங்காரம் பயனின்றி யழியுமோ அதுபோலவே மூடன் முன் மொழிந்த பாடலும் ஆகும் என்பதாம்.

ஐயோ! பேதைகள் பெரியோரையும் அவர்கள் நூற்களையும் பாக்களையும் கல்லாதிருக்கின்ருேமே என்னும் நாணமுமின்றிக் குறையும் கூறமுன் வந்துவிடுகின்றனரே.

நாம் தலைப்பில் எடுத்துக்கொண்ட பாடல் மூதுரையில் அமைந்துள்ளபாடல். இது சாமான்யமாக எல்லோருக்கும் தெரிந்ததே இதில் கல்லாதரின் இழிவை உரைக்கப் புகுந்த ஆசிரியர் கவி புனைந்துள்ள சதுரப்பாட்டை யறிந்து வியப்புறுவோமாக.

இச்செய்யுளின் மொழிப்பாவது, காட்டினிடத்தில் கிளைகளும் கொம்புகளையு முடையதாக நிற்கும் அவைகளெல்லாம் நல்ல மரங்களல்ல பின் நல்ல மரங்களெவை யென்ருல் சபையிலே நீட்டிய ஓலையை வாசிக்க மாட்டாதவனுகி நின்றவனும் குறிப்பறிய மாட்டாதவனுமே நல்ல மரம் என்பதாம்.

இதில் கப்புங்கிளையு முடையதாய்க் காட்டில் இருப்பது நல்ல மரமல்லவென்றும் சபையில் நீட்டிய ஓலையை வாசியாதவனும் குறிப்பறியமாட்டாதவனும் நல்ல மரம் என்பதில் பொதிந்த கருத்தை உற்று நோக்காறியவும் கூடுமோ. மரம் ஓரறிவுடையது. மரம் தருதற்குரியதாவது இன்சுவைக்கனி நறுமணப்போதுமுதலியன, நிழல் பயப்பது மட்டுமன்று. நற்றங்கனி மணமலர் தராத மரங்கள் நாம் ஊர் நடுவில் இருப்பின் தரத்தக்க பயனைத்தராத மரமென்று மக்கள் இகழ்வர் என நாணி காட்டில் மக்கள் கண்ணிற்குப் புலப்படாது மறைந்திருக்கிறது. (இது தற்குறிப்பேற்றத்தாற் பெற்ருும்) ஓரறிவுடை மரமே பகுத்தறிவு கொண்டு நாணி மறைந்திருப்பதென்ருல் அப்பொழுது மரமென்ற ஒரு அறிவுப்பொருளாகாது மேற்பட்ட பகுத்தறிவு கொண்டதால் மரமென்னும் இலக்கணத்துக்கு மீறி மேற்பட்டமையால்

நல்ல மரமல்லவென்றார். இதனாலே அம்மரம் மரங்களுக்கு மேற்பட்டு மனுஷ சுபாவம் பெற்றதென்பதைக் கவி சாதூர்யத்தாற் காட்டினார். இனி மனிதனை நல்ல மரமென்றதைப்பற்றி ஆராய்வாம்.

இனி மனிதனை நன்மரம் என்றதன் நயம் விவேகிகளுக்கு உவகையை யுண்டாக்காதிராது.

மரம் மனிதர் இகழாதிருக்கக் கான் புக்கது அதனால் மரமாந் தன்மையினின்று நீங்கிற்று.

நீட்டிய ஓலை வாசிக்கமாட்டாதவனும் குறிப்பறியமாட்டாதவனுமாகிய ஒரு மனிதன் வாட்டசாட்டமாய் இருந்து வாசிக்கவும் குறிப்பறியவும் மாட்டாதவனாக இருக்கின்றானே என்று பார்ப்போர்கள் இகழ்வார்களே என்றும் தோன்றாமல் நாணமுமில்லாமல் அறிவின்றி மரம்போல் நிற்கின்றானாகையால் நல்ல மரம் என்றார்.

மரம் என்ற இலக்கணத்திற்குச் சிறிதும் குறைவின்றி உணர்ச்சியற்று இருப்பதால் நல்ல மரம் என்றார். மரத்தின் இலக்கணம் குறையாது நிரம்பியமையால் நல்ல மரம் என்றார்.

இதில் முதல்தர அசடன் என்றதுபோல நல்ல மரம் என்றதில் பொருள் அமைந்திருப்பது காண்க.

இன்னும் விரிகிற் பெருகும், விரிவஞ்சி விடுத்ததாம்.

இதுபோலப் பலநயமும் பொருட்செறிவும் அமையப் பாடுவதே கவிச்சமத்தாகும்.

**சதாசிவம் கணேசம்பிள்ளை.**

திரிசிரபுரம்.

# உத்திரமேரூர் சரித்திர சுருக்கம்.

**பல நூற்றாண்டுகளின் முன்னர் தென்னாட்டினின்றும்**

1. காளப்பன்
2. வெள்ளைமூர்த்தி
3. செல்லன்
4. பட்டன்
5. அபிராமன்
6. சீராமன்
7. நாயினான்
8. அத்தியூரான்
9. புரந்திரன்
10. மீனவன்
11. திருவையாறன்

என்னும் பெயர்களைகொண்ட பதினொரு தமிழர்கள் தாங்கள் தங்கிவாழ ஓர் இடம் உண்டாக்கிக் கொள்ளக்கருதி வட திசையை நோக்கி ஸ்ரீகாஞ்சிக்கு தெற்கும், கழுக்குன்றினுக்கு மேற்கும், விரிஞ்சிக்கு கிழக்கும் ஆகிய ஓர் வனத்தினூடு வருங்கால் வழியில் ஓர் வேங்கை படுத்துறங்கக்கண்டு மேற்செல்ல வேறுவழியிலாமையாற் தியங்கி நின்றனர்.

அவ்வுழி ஆங்கோர் முதியார் வந்து அப்புலியை விபூதியாலகற்றி தன்னுடன் மேற்கண்ட 11 தமிழரையும் அழைத்துச்சென்று அவர்கட்கு தகுதியான ஓர் மேட்டு சம நிலத்தைக் காட்டி அங்கு நிலந்திருத்தி வாழும்படி கட்டளையிட்டு அருகிலிருந்த புதரில் நுழைந்து மறைந்தனர்.

தங்கள் துன்பத்தை நீக்கி தக்க இடத்தை தங்கட்குக் காட்டிய முதியோர் சென்றவழிச் சென்று பார்க்குமளவில் அங்கு ஸ்ரீ குகப்பெருமான் திருவுருவம் தனித்து நிற்கக்கண்டு, தங்களுக்கு துணையாக வந்த அண்ணல் இவரே ஆகுமென தெளிந்து அவ்விடத்தில் ஓர் ஆலயம் அமைத்து தங்களுக்கும் இடம் கொண்டு காடு திருத்தி தங்கள் பதினொரு பெயருடன் ஸ்ரீ குகப்பெருமானையும் ஒரு பாகத்தவராகக்கொண்டு கட்டளை 1-க்கு காணி 100-வீதம் 12 கட்டளைகளாக 1200 காணி நிலம் கொண்டு தங்கள் தங்கள் பெயரானே நிலங்கட்கும் பெயரிட்டு குகப்பெருமானுக்கு ஆக்கிய நிலத்திற்கு "குமரன் கட்டளை" என்னும் பெயரைக்காட்டினர்.

அன்னவர்களால் திருத்தப்பட்ட நிலங்கட்கு,

1. ஜம்புகசம்
2. கும்ப சமுத்திரகசம்
3. கருவன்கசம்
4. பிள்ளைகசம்
5. புத்தேரீஸ்வரர்கசம்
6. ஆயனேரி (கசம்)

என 6 ஊற்றுநீர் கசிவு வாய்க்கால்களால் நீர் பாய்ச்சி சாகுபடி செய்து வந்தனர்.

பிற்காலத்தில் (டாஹிர்மென் சக்ரவர்த்தி காலத்தில்) ஏரி ஏற்படவும் மேற்சொன்ன கசிவு நீர் வாய்க்கால்களைத் தூர்த்து குளங்களாகச் செய்துவிட்டனர் அக்குளங்கள் இன்றும் அப்பெயரானே வழங்கப்படுகின்றன. இக்காரணம் (ஊற்றுநீர் பாய்ச்சல்) பற்றி "பாய்ச்சலூர்" என ஓர் பெயர் இந்நகருக்கு சில காலம் வழங்கி வந்ததாக சில சாசனங்கள் காட்டுகின்றன.

மேற்சொல்லிய 11 பெயரான் திருத்திய கட்டளைகளின் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 1. | குமரன் கட்டளை | 7. | சீராமன்கட்டளை |
| 2. | காளப்பன் கட்டளை | 8. | நாயினுன் கட்டளை |
| 3. | வெள்ளைமூர்த்தி கட்டளை | 9. | அத்திபூரான் கட்டளை |
| 4. | செல்லன் கட்டளை | 10. | புரந்தரன் கட்டளை |
| 5. | பட்டன் கட்டளை | 11. | மீனவன் கட்டளை |
| 6. | அபிராமன் கட்டளை | 12. | திருவையாறன் கட்டளை |

என்பனவாம் இப்பெயர்கள் இன்றும் இராஜாங்க ஆதாரங்களாலும் வழக்கிலும் வழங்கி வருகின்றன.

மேற்காட்டிய பதினொருவரும் தாம் குடியேறிய இடத்தினுக்கு "மேரூர்" எனவும் ஆங்கு எழுந்தருளிய குகப்பெருமானுக்கு "வேலர்" எனவும் பெயரிட்டு வணங்கி வழங்கி வந்தனர்.

மேரூர் என அன்னவர்கள் தங்கள் இருப்பிடம் என்னும் கருத்தாலோ; அன்றி சுற்றிலுள்ள நிலத்தைக் காட்டினும் மேடாகவும் கற்சார்ந்த பூமியாகவும் இருந்தபடியாலோ யாதோ ஒரு காரணம்பற்றி வழங்கிவந்ததாகத் தெரிகிறது, மேரூர் எனினும், மேட்டூர் எனினும் இருப்பிடம் எனினும் ஒரு பொருளேயாம்.

பின்னொருகாலம் இவ்வூரில் "மங்கை" என ஓர் தமிழ் பண்டிதை இருந்ததாகவும் அவருக்கிருந்த அரசாங்க ஜனங்க செல்வாக்கைக் கண்டு பொருமைகொண்ட விப்பிரர் சிலர் அவரை அவமதிப்பு செய்யக் கருதி யாதோ சூழ்ச்சி செய்ததாகவும் அதனால் அப்பண்டிதை சினந்து வஞ்சனைக்காரர்களாகிய விப்பிரருக்கும் அவரைச் சார்ந்தவர்கட்கும் கொடுமையான சாபமிட்டு தன் வாணளைத் துறந்தன ரெனவும், அச்சாபக்கொடுமையால் அக்கால் இந்நகரத்திருந்த விப்பிரர் வெளியேறி விட்டனரெனவும், அவர்களில் சிலர் திருநெல்வேலி ஜில்லா தாமிரபரணிதீரத்தில் இன்றும் இருக்கின்றனரெனவும் அம்மங்கையால் இந்நகரில் எழுந்தருளி இருக்கும் வேலாயுதக்கடவுளுக்கு ஆலய முதலிய திருப்பணிகளும் விழா முதலியனவைகளும் சிறப்ப நடத்தி வந்ததாகவும் அதனுனே அக்கடவுளுக்கு "மங்கைவேலர்" எனவும், நகருக்கு "மங்கைமேரூர்" எனவும் பிற்காலத்தவரால் வழங்கலாயின வெனவும், அநேக ஏட்டுப்பிரதிகளாலும், பிரத்தியக்ஷ பிரமாணங்களினாலும் ஏற்படுகிறது.

அன்றியும் அப்பண்டிதையால் எடுக்கப்பட்ட தடாகத்திற்கு இன்றும் "மங்கைகுளம்" என்னும் பெயர்வழங்கி வருவதன்றியும் அப்பண்டிதையால் (வசையாக) சொல்லிய "பாய்ச்சலூர் பதிகம்" என்னும் நூலாலும் மேற்காட்டிய விவரங்களைப் பார்க்கக்காணலாம்.

மற்றும் மேற்காட்டிய மங்கை யென்னும் பண்டிதையைக் குறித்து அனேக சரித்திரங்கள் உள அவற்றை பின்னொரு சமயம் விரிப்பாம்.

சோழஅரசர்கள் தஞ்சையைத்தலைநகராகக்கொண்டிருந்தகாலத்தில்அரசன் அந்தரங்கநகரம் ஒன்றை உண்டாக்கி அதற்குஆஸ்தானம் அல்லது (அரசர்) இருப்பிடம் என்னும் பொருள் தருவதான மேரூர் " எனக்கொண்டதைப்போன்று காஞ்சிநகரைத் தலைநகராக அவ்வரசர்கள் கொண்டகாலத்தில் இந்நகரை வாசஸ்தலமாக கொண்டதனால் இந்நகருக்கு வடமேரூர் அல்லது "உத்திரமேரூர்" எனப்பெயரிட்டு அதுமுதல் அப்பெயரானே வழங்கிவரலானது.

(இன்னும் வரும்) **S. S. S.**

## பரோபகாரம்.

'பரோபகாரம்' என்பது பிறர்க்குதவி செய்தலெனப் பொருள்படும். எவ்வகைப் பிறப்பினும் மேன்மைத்தாய விம்மானிடப் பிறப்பெடுத்தோரனைவருமாயிர மடங்கள் புடனுதரித்தற் பாலதிப் பரோபகார சிந்தையேயாம். இத்தகைய பழக்கம் ஒருவர் கற்பித்தலினால் மாத்திர முண்டாகக்கூடிய தென்பதற்கோ விடமில்லை ஆகவே இஃது ஒருவருடன் பிறந்தே யிருக்கவேண்டும்.

உபகாரம் செய்வதில் எண்ணிறந்த வகைகளுளவெனினும், எவ்வகைய வுதவியினைச் செய்யினும் உதவியில்லாது வருந்துவோரின் தேவைக்குத் தக்கவாறறிந்து உபகரியாவிடி லவ்வுதவி பயனற்றதொன்றே, பரோபகாரம் செய்தலெவர்க்கு மெளிதாகத்தோற்றுவது கஷ்டசாத்திய மெனினும் அதனையடைந்தவன்றேயவர் தலைப்படுவர். உபகாரம் செய்வதனால் விளையு நன்மைகட்கோவளவில்லை.

கஷ்டத்தினையனுபவித்து வருமொருவனுக்கு அவனது அபேக்ஷையை யறிந்து நாம் தக்கவாறுதவி செய்யின், அக்காலவன் அடையுமானந்தத்திற்கும் நன்றியறிவு நிரம்பியவவனது மனத்தாலவர் நம

மை வந்திப்பதற்கு மளவொன்று முண்டுகொல்! ஆஹா! கஷ்டமடைந்தவர்க்கன்றோ சமயோசித உதவியின்மேன்மை தெற்றெனப் புலப்படலாகும்? தம்மாட்டுக்கிருபைபுரிந்து தமக்குதவியோர்பால் அவர்எக்காலுமன்பு பாராட்டக் கடைமைப் பட்டிருக்கின்றனரல்லரோ?

மானிடர்க்கன்றி, பேசுந்திறனில்லாப் பிராணிகட்கு முதவுவது நமது தவறுணக்கடனே. மானிடரோ தம் குறைகளைப் பிறரிடத்தறிவிக்கும் சக்தியுள்ளமைபற்றிப் பிறரிடமுதவி பெறற்கிடமுண்டு. பிராணிகளோவெனில், தம்முடைய வருத்தத்தைக் குறிப்பாலுணர்ந்து தமக்குதவி செய்ய எவரேனும் முன்வந்தாலன்றி வேறு வழியினுதவிபெறற்கிடமில்லை.

ஆகையால் இத்தகைய பிராணிகளுக்குச் செய்யு முதவியே மற்றைய யாவற்றையும்விட மேலாயது எனினும் ஏற்கும். இதனையே விரதமாகக் கொண்ட மானிட சிரோமணிகளனேகருளர். அத்தன்மையாய் நடத்தலன்றோ பிறவிகொண்டதற்கழகாகும்? அந்தோ! பிராணிகட்குதவி செய்யு முத்தமர்களிலாது போயினவைகளாயுண் முழுதும் துன்பமே யனுபவிக்கவேண்டு மன்றோ?

பிறந்தது முதல் பரோபகார சிந்தையே மேலிட்டிருந்தனுளிளவயதிலேயே, காலில் முட்டைத்திருந்த வோர் நாயினைக்கண்டு அதன் வருத்தத்தைக் குறிப்பாலுணர்ந்து அதன் கால் முள்ளைப்பிடுங்கிச் சௌக்கியம் செய்வித்துப் பின்னர், க்ரிமியா (Crivea) யுத்தத்திற் சென்று, காயம்பட்டு வீழும் ஆங்கிலப் போர்வீரர்களது காயங்களுக்கு சிகிச்சை செய்து, உலகெங்கும், "**பரோபகாரமே மதமாகக்கொண்டசீமாட்டி**, என்னும் பெரும்பெயர் வாய்ந்து, அப்பரோபகாரமே நிலைபெறுமென்று நாட்டிச்சென்றவையோப்பியமாதர் திலகம் 'பிளாரென்ஸ் நைட்டிங்கேலின்' பேருக்கமும் பெருமைக் குணமும் மறத்தற் பாலவல்ல.

அவ்வம்மை, தாம் விவாஹம் செய்துகொள்ளின் தாம் மேற்கொண்ட "பரோபகார விரதம்" நிறைவேறுமோ நிறைவேறாதோவென்றை யுற்றாய்த்தம்மாயுண் முழுதும் மணவினை மறந்திருந்தனரெனின், அவரது விரத வைராக்கியம் மிகவும் மெச்சற் பாலதேயன்றோ?

முன்னர், 'வாஷிங்டன்' தனபதி, தாம் நீர் வேட்கை மிக்கவடைந்து யுத்தகளத்துப் "பருகுநீர் கொணர்மின்" என வெவ்வளர்ளிரைய

பணித்தலு மங்ஙனம் கொணரப்பட்ட நீரைத்தாம் பானம் செய்யத் தம் வாயண்டை கொண்டு செல்கையில், சண்டையில் காயம்பட்டு மரணதாகமடைந்து கிடந்த ஓர் போர்வீரன் நீர் பருக வேண்டுகிறனென்பதை யவனது முகக்குறிப்பா லுணர்ந்து தம கையதை யவனிடமீந்து அவன் பருகக் கண்டு களித்தனரெனக் கேள்வியுறும் நமது மனதில் நாமும் இத்தகைய உதவி செய்வதும் அவசியத்தினு மவசியமென்னுமோர் எண்ணம் ஜனிக்கவில்லையா?

கொல்லப்படுந் தருவாயிலிருந்த புள்ளினுயிரைக் காத்தற் பொருட்டன்றோ சிபி தன்தசையையு மீந்தனன்? ஆதலின், பரோபகாரமே யாவற்றினு மேலாயதென்பது வெள்ளிடை மலைபோற் றெள்ளிதிற்றோன்றும்.

பிறரது உதவியைத்தேடும் எவர்க்கும் அவரது சமயத்திற்கு அஃது கிடைத்தவப் பொழுதன்றோ அவர்கள் கவலைநீங்கி நல்வாழ்வு வாழ்ந்து நாட்டில் மேலோருடன் சேர்ந்து முன்னுக்கு வரவேண்டுமென்று கருதுவர்? நாட்டிலுள்ளோரிற் பெரும்பான்மையோ ருதவியை வேண்டியோராயும் செய்பவர் மிகச் சிலராயுமிருப்பின் நாட்டார் எங்ஙனம் முன்னுக்கு வருவது?

ஆகவே நாட்டின் நலங்கருதி நாடோறு முழைக்குமொவ்வொருவரும் பரோபகார சிந்தையையே போற்றி வளர்த்து அதனால் வினையும் அரும்பெரு நன்மைகளையடைய வாயுளுள்ளளவும் முயன்று பயன்பெறுவாராக.

உதவியை மிகுதியும் வேண்டி நிற்கும் நமது "செந்தமிழ்ச்செல்வம்" போன்ற செவ்விய பத்திரிகைகளை யாதரித்துப் போற்றுதலும் பரோபகாரத்துள்ளடங்கிய செயலே யென்பதை நம் நேயர்களறிவார்களாக.

கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி,
S. P. G. College.

## விகடகூற்று.

I. சப்மாஜிஸ்திரேட்—நீ இந்தக்கடியாரத்தைத் திருடவில்லை என்கிறாயே பிறகு உனக்கு இது எப்படிக் கிடைத்தது சொல் பார்ப்போம்

குற்றவாளி—ஐயா நான் அதை விலைக்கு வாங்கினேன்.

சப்மாஜிஸ்திரேட்—எவ்விடத்தில் வாங்கினாய் அதன் கிரயம் என்ன உள்ளதை உள்ளபடி சொல் பார்ப்போம்.

குற்றவாளி—ஐயா கடைத்தெருவில் வாங்கினேன். உண்மையாய்ச் சொல்லுகிறேன் அதன் விலையைக்கேட்க மறந்துபோய் விட்டேன், நான் என்ன செய்வேன்.

II ஒரு தனவந்தனிடம் ஓர் வித்துவான் பரிசுபெறச் சென்றிருந்தார். அங்ஙனம் சென்று தன் கல்வித்திறமையெல்லாம் அவனிடம் காட்டினார்: அத்தனபாலன் இவ்வித்துவானின் ஆற்றலைக்கண்டு உவந்து பரிசாக ஒரு கருப்புக் கரையிட்ட துப்பட்டாவை அளித்தான் அதற்கு அவ்வித்துவான் இது என்ன * காரித்துப்பட்டா என்று கேட்டார். அத்தனவந்தன் வெட்கி முகங்கவிழ்ந்தான். பிறகு இன்னும் கொஞ்சம்பணம் கொடுத்துப்போகச் சொன்னான்.

* காரித்துப்பட்டா என்றால் சரிகை வேலை செய்த கருமையான வஸ்திரம் என்று பொருள்படும் இன்னும் காரி உமிழட்டுமா என்றும் பொருள்படும்.

நட்புத்தொடர்.

## செந்தமிழ்ச்செல்வம்.

(104-ம் பக்கத் தொடர்ச்சி.)

7. இவ்விதமாக நட்பாராய்ந்து நட்பைக்கொண்டால் அந்நட்பாளரோடு இடைவிடாது நட்டல் வேண்டும்

பாம்பொடு பழகினும் பிரிதலின்மையாம்
விலங்கே யுந்தம் மோடுடனுறைதன்மேவுங்
கலந்தாரைக் கைவிடுதலொவ்வா
விலங்கிற்கும் விள்ளலரிது. கூடிப்பிரியேல்.

என்ற முதுரைகளுக்கிணங்க நட்டுப்பிரிதல் கூடாதாம் விரும்பி நட்டவர்கள் அறிந்து மறியாவுமாகிய குற்றத்தைச் செய்யினு மக்குற்றத்தை மாற்றி நன்னெறியின் பாற்படவுய்ப்பதே மேலான நெறி எவ்விதமெனின் (செறுத்தோறுடைப்பினுஞ் செம்புனலோடோர், மறுத்துஞ் சிறைசெய்வர் நீர்நசை வாழ்நர்) களைபவோ கண்குத்திற்றென்று தங்கை என்றபடியும் அந்நட்புளர் செய்த குற்றத்தை வேற்றுரோகி

உரையெடாது தம்மகத்தில் அடக்கிவைத்துச் சீர் செய்வது ஆன்றோர் தன்மை (இழிந்தக்ககாணிற்கண்) எனற்போல.

8. முதலிற் பெருக்காக நட்டைவைத்துப் பிறகு சிறுமையடைவதின்மையே மேலான நட்பு கோட்டுப்பூப்போல மலர்ந்து பிற் கூம்பாது வேட்டதே வேட்டதா நட்பாட்சி (எனற்போல—நட்புமேலோர் தொடர்பு முதிரமுதிரக் காய்முற்றிற் றீங்கனியாம்) சிறியோர் கேண்மை தளிர்முற்றுதலை யொக்கும் (யானையனையவர் நட்பைவிட நாயனையவர் நட்பே மேலாயது) எனெனில் யானை யறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்—ஞாளியானது—எறிந்தவேன் மெய்யதா வால்குழைக்கும் (நட்பாளர் இலாத்திசை கூடப்பாழாய்முடியும்) தான்செல்லுந் திசைக்குப்பாழ் நட்டோரையின்மை (நான்மணிக்கடிகை) என்று திசைக்கே இக்குற்றம் ஏற்படின் நட்புதவியிலா மாந்தரின் றன்மை உரைக்காமலே விளங்கும்.

9. இவ்விதமாக நட்ட நட்பானது தலைநட்பு, இடைநட்பு, கடைநட்பென்று மூவிதமாம். தலைநட்பாளர் பனைக்கும் இடைநட்பாளர் தென்னைக்கும் கடைநட்பாளர் கமுகுக்குஞ் சமானமாவார்கள். பனையினது குணம் பனைவிதையைநட்டு முதல் நாள் மட்டும் நீர் வார்த்தலைக் கொண்டே பிரயோசனங் கொடுக்கும். அவைபோல் தலைநட்பாளர் ஒரு நாள் ஒருவரது பிரயோசனத்தைச் சிறிதடைந்தால் மாறுது அவர்களுக்குப் பிரயோசனத்தைப் பயப்பர் தென்னையினது குணம் யாதெனில் இடை விட்டுவிட்டு போற்றினுந் தெங்கு பலன் கொடுக்குமதைபோல் இடை நட்பாளர் இடை விட்டுவிட்டுச் சேர்ந்தாலும்பயன் கொடுப்பார்கள். கமுகுக்கு இடைவிடாது தொழிற் செய்தால் பயன் கொடுக்கும் அவைபோல் கடை நட்பாளர் இடைவிடாது பழகினல் தான் ஊதியம் பயப்பர்கள்.

10. நட்பாளர்களது மேலான நட்பானது (நுனியிற் கரும்பு தின்றதைப்போலும் நவிலுறு நூனயம்போலும்) பிறைமதியைப் போலும் (நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே யிருக்கும்) சிறியார் தொடர்பானது நிறைந்த மதியைப்போலுந் தூரிற் கரும்புண்டதைப் போலும் (நாளுக்குநாள் குறையும்) தாம் செய்த நட்பாளர் செய்த பிழைக்கு நகாமல் உடனே சென்று நயத்தில் அவர்கள் திரும்பாவிட்டாலு மிடித்துக்கூறியாவது அவர்களை நல்வழியிற் றிருப்புவதே மேலாம் அவையினிடத்து ஆடை குலைந்தவனுக்குக் குலைந்தவப் பொ

ஞ்தே க்ரமாய் மனத்தினு மூற்பட்டு விரைந்து சென்று குலைந்த வவ்வாடையைக் கட்டுகின்றதோ அப்படியே நட்பாளனுக்குத் துன் பமேரிட்ட அப்பொழுதே மனத்தினு முன் சென்று உதவி யியற்று வதே நட்பின் வனப்பாம்.

11. நட்பாளர்கள் ஒருவரை யொருவர் விட்டு நீங்கித் திரும்ப நட்டாலும் அந்நட்பு மேலான தொடர்பாகா (எப்படியெனின் நெல் லினுமி சிறிது நீங்கிப்பழமைபோற் புல்லினுந்திண்மை நிலைபோம்) என்றபடி நட்பில் இவர் நமக்கித்துணை யன்மினர் யாமிவர்க் கித்தன் மையமென்று ஒருவரை யொருவர் புனைந்து சொல்லினும் நட்பானது புல்லிதாய் முடியும். உடலொன்றும் உயிரிரண்டுமாகத் தெரியும் வண் ணம் நட்டல் ஒழுங்கு.

12. நட்பானது உலகினர்க்கு எப்படி யென்னின் சுள்ளி ஒவ் வொன்றாக இருக்கும்போது எளிதாய் முரித்துவிடலாம் சேர்த்துக் கட்டாகக்கட்டினால் முறிக்கமுடியாவவைபோல ஒவ்வொருவருக்கும் (நட்புதவியிலாவிடில் ஊதியம்பயவா) நட்பாளர்கள் ஒருவரோடொரு வர் கலப்பதைப் பேசிக்குமிடத்து.

கவி.

நற்றுமற்றைக்கயத்தினல்லன்னஞ்சேர்ந்தாற்போல்
கற்றாரைக்கற்றாரேகாமுறுவர்—கற்பிலா
மூர்க்கரைமூர்க்கர்முகப்பர்முதுகாட்டிற்
காக்கையுகக்கும் பிணம்.

பொன்னுந்துகிரு முத்துமன்னிய மாமலைபயந்த காமருமணியு மிடைபடச்சேயவாயினுந் தொடைபுனர்க, தருவிலைநன்கலமமைக்குங் காலையொருவழித் தோன்றி யாங்கென்றுஞ் சான்றோர். (சான்றோர் பாலராப) சாலார் சாலார் பாலராகுபவே (புறநானூறு) என்ற பழமொ ழிகளுக்கிணங்கச் சான்றோரோடு மேலோர்களும் கயவருடன் கீழ்மை யோருமாகவே நட்புச்செய்வர்.

13. நட்பு--புணர்ச்சியா லாகியதூஉம் பழகுதலாலாகியதூஉம் உணர்ச்சி யொத்தலாலாகியதூஉமென மூன்று வகைப்படும். புணர்ச் சியாவது நெருங்கி யிருத்தல் அஃதாவது ஓரூரார்கள் செய்யும் நட்பு (இன்றேபோல்கநும் புணர்ச்சிதானே) எனக்கூறுவது மிங்கறியத் தக் கது (பழகுதலாவது மறு தேயத்தாராயிருப்பினும்) பலகாற் கண்டுஞ் சொல்லாடியும் மருவுவதாம் (உணர்ச்சி யொத்தலாவது) இவ்விரண்டு

யின்றி அறிவு ஒத்திருத்தலாம். (எப்படி யெனின் பாண்டி நாட்டிலுள்ள பிசிர் என்னு மூரிலிருந்த பிசிராந்தையார் என்னும் புலவர் தமது நேசஞன உறையூரை இராஜதானியாகக் கொண்டிருந்த கோப்பெருஞ் சோழன் யாவற்றையுந் துறந்து உயிர் விட்டதைக் கேட்டுத் தாமும் உடனே இறந்தாரென்பது கதை.) கோப்பெருஞ் சோழற்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சி யொப்பின் அதுவே உடனுயிர்நீங்கு முரிமைத்தாய கேண்மையைப்பயக்கும்) நட்பிற்குப் புணர்ச்சி பழகுதல் உணர்ச்சியொத்த லென்னுங் காரண மூன்றனுள்ளும் பின்னதே சிறப்புடைத்தென்பது தெள்ளிதின் விளங்கும் ஆகையால் நட்பாளர் உணர்ச்சி யொத்திருப்பதே மேலாம்.

14. மேலேதீ நட்பாளர்கள் என்று பொதுப்படச் சொன்னோமேயொழிய இன்னவிதச் செய்கையுளரென்று சிறப்பு வகையாற்கூறு தொழிந்ததை இவண் விபரங்கூறுதும்.

கவி.

காதலரெனும்விடு விலைமாதர்கள் வரிற்றமக்குறல் குறிப்போர்
பேதையர்கெடுதியுற்றுழியுதவார் பெருமபொருணகுவித்துப்பிரிபவ
ராதருகருமந்தம் மினுகாததாகவே நடிப்பவருள்மு
மோதலுமொரவ்வார்மனக்கெழு இமன்றினுறப்பழிப்பாரிவர்தமையே

மேற்சொல்லியவர்கள் புதல்வர்களா யிருந்தாலும் நீக்குவதே தகுதி என்ற விநாயகபுராண விரிவைக் கவனிக்கத்தக்கது.

15. உலகினர்க்கு நட்பானது பலப்பட ஒற்றுமை யுண்டாகும் ஒற்றுமை அதிகரித்தால் ஜீவகாருண்யம் முதலான நற்குணங்கள் உண்டாம் நற்குணங்கள் மிகுந்தால் தீக்குணமாறுவது சொல்லாமலே விளங்கும். எத்தால்வாழலாம் ஒத்தால் வாழலாம். (என்ற பழமொழிப்படி) நமக்குள் ஒற்றுமைஉண்டானல் (நாம் சுகப்படுவதோன்றே நம் தாய் நாடுஞ்சுகப்படும்) நாமும் அன்னியர்களைப்போல் சுயநலம் பாராட்டலாம். ஆகையால் இதை விரிக்கிற் பெருகுமென்றஞ்சி இத்துடனிறுத்து கின்றனம். மேற்சொன்ன காரியங்களுக் கெல்லாம் தலைமையாயுளது நட்பானதால் இந்நட்பானது செந்தமிழபிமானிகளுக்கும் நம் பாரத சஹோதரர்களுக்கும் இடைவிடாது அகத்தில் நிலவுமாறு எல்லாம் வல்ல எம்மிறைவன் இணையடிகளை இறைஞ்சாநின்றேன்.

முற்றிற்று.

விரோதிகிருது-ஞு ஆவணி-மீ 23உ கச்சமங்கலம் தெற்கிலுழவு

சோ. சிங்காரவடிவேல்வன்னியமுண்டார்
அக்ராசனதிபதி
இயற்றமிழ்ச்சங்கம், கச்சமங்கலம்.

# அக்ஷராவதான விடுகதை வினா.

## பதினாறடியாசிரிய விருத்தம்.

அன்பானநண்பருக்குரிய பெயர்பத்தெழுத்
    தாகுமதிலைந்து நான்கேழ்
அக்ஷரங்களிலன்பெனச் சொல்லலாமூன்று
    ஆறேழுமொன்றி நின்றால்
அகலமென்றோதலா மைந்தேழிலச்சமாம்
    ஆறேழினெட்டதால்
அநுசனுமெட்டுநான் காறேழினாலீகை
    யாகுமுதல் நான்கேழினால்
இன்பானராகபேதங்களினை யறிவிக்கும்
    இசையாகுமைந்து மூன்றே
ழேழினாலொலியாகு மூன்றுநான்கேழினால்
    இதமாகமலை யென்னலாம்
ஏகமுபயந்திரியெழுத்துக் களோடுநான்
    கேழுமே கூடிலழகாம்
ஈரிரண்டாறே. ழெழுத்தினாற்றேனை
    இயம்பலா மைந்தினோடு
ஒன்பானுதிற்றினமெனச் சொல்லலாயாதி
    யோடுநான்கெட்டுபசுவாம்
ஒன்றுமூன்றேழினால் முறைமையானமந்தெட்டுடன்
    உரைசெயுங்கொப்பூழென
ஒன்றுநான்காறேழ் புணர்ச்சியாமைந்துபத்
    தொக்கவே மற்றைநாளாம்
உற்றமூன்றுபயமாறேழினாற்பல்லென
    உணர்த்துமெட்டாதியாலே
வன்பானதிண்புய வரக்கனொருவன்பெயர்
    வழுத்துமொன்றாதியாலே
மாவிலங்காமைந்துநான்காறெழுக்கூடி
    வரிலொரு புராணமாகும்
மகிமைபெறுகவிவாணர் தகைமையுடனிக்கவியின்
    மருவியுளநண்பர் பெயரை
வகையுடனறிந்து விடையகருவீரென்னவே
    மன்றாடுகின்றேனரோ.

வே. முத்தனுசாரி,
ஸ்டேஜ்மானேஜர்.
S. S. S. V. கம்பெனி பழனிஸ்தலம்

## " புத்தகவரவு "

**"பஞ்சபக்ஷிசாஸ்திரசந்திரிகை"** இது திரிசிரபுரம் தென்னூர் ஸ்ரீமாந் தி. த. குழந்தைவேல்பிள்ளை அவர்களால் பல நூல்களினின்றும் ஆய்ந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட ஒரு அருமையான நூல். இந்நூல் சாஸ்திரவாதிகளால் நன்கு மதிப்பைப்பெற்றிருக்கிறது. இது வுலகுக்கு மிக்க அவசியமுடைய தொன்றேயாம். இதன் விலை அணா 4. இதனை எமக்கனுப்பிய ஆசிரியருக்கு எமது வந்தனத்தை நனி செலுத்துகின்றோம்.

**"ஆந்திரார்த்தப்பிரகாசிகை அல்லது காஞ்சிவ்வாதக்கட்டளை."** இது ஸ்ரீமத் வேலாயுதசுவாமிகள் இயற்றியதாம். இதனை முற்றுங் கண்ணுற்றேம். மிகச்சிறந்த அவசியமுடைய நூலாகவே காண்கின்றது. இதனை எமக்கனுப்பிய நண்பர் திரிசிரபுரம் தென்னூர் ஸ்ரீமான் தி. த. குழந்தைவேல்பிள்ளை அவர்களுக்கு நன்றி பாராட்டுவதோடு வந்தனமுஞ் செலுத்துகின்றோம்.

"திருக்கச்ச மாலை, உயிர்வருக்க மாலை, இரட்டைமணி மாலை, தனித்துறைகள் இத்தனையு மடங்கிய ஒரு புத்தகம் வரப் பெற்றோம். பெயருக் கியைந்த பொருத்த முடையவையாய் நயமுடையவையாய் பாக்கள் விளங்குகின்றன. இதனை யியற்றிய ஆசிரியர் கச்சமங்கலம் தூயதமிழ்ச்சங்க அக்ராசனாதிபதி ஸ்ரீமான் சொ. சிங்கார வடிவேல் வன்னியமுண்டாரவர்கள்.

"அக்கினிப்பிரபாவதீபிகையும் பட்டப்பெயர் பிரபாவமாலையும்" இஃது ஸ்தாவதரனம், யாழ்ப்பாணம் ஸ்ரீமான் நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் பிரதமமாணாக்கரும் சென்னை வேதாகமோக்த சைவசித்தாந்தசபையின் காரியதரிசியும், செ. வ. க்ஷ. மகாசங்க லோகல் கமிட்டி மெம்பர்களில் ஒருவருமாகிய புரசை மு. பாலசுந்தர நாயகர் அவர்களால் இயற்றப்பட்டது. இந்நூலினானே இவர்கள் பல நூலாராய்ச்சி வல்லுநரென்பது தெளிவாகும். இவர் நூல்கற்றோராய் விரும்பப்படுவதொன்றேயாம்.

## பலதேசவர்த்தமானம்.

### தமிழ்! தமிழ்!

எஸ். பி. ஜி. ஐஸ்கூல் மாணவர் தமிழ்ச்சங்கம் இதன்வருஷப் பூர்த்தி சென்ற பிப்ரவரி-மீ வெகு விமரிசையாக நடந்தேறியது. சங்கத்து அங்கத்தினர்கள் ஒரு சிற்றுண்டி விருந்து நடத்தினர். நாஷனல் ஐஸ்கூல் ஸ்தாபிதர்களில் ஒருவராகிய ஸ்ரீமான் சுந்தரசாஸ்திரி

யரவர்கள் அக்ராசனாதிபத்தியத்தின் கீழ் வெகு விமரிசையாக நடந்தது, அஞ்ஞான்று ஸ்ரீரங்கம் ஐஸ்கூல்தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் குரு சுப்பிரமணிய ஐயரவர்கள் தெய்வப்புலமை ஔவையாரின் சரித்திரத்தை கருணானந்தமாகப் பிரசங்கித்து எல்லோரையும் களிப்பித்துபயன் பெறச்செய்தனர். ஆயிரம் பேர்களுக்குமேல் அஞ்ஞான்று குழுமி யிருந்தனர்.

அன்றை மாலை கோட்டை ரயில்வே இன்ஸ்டியூட்டில் சங்கத்து அங்கத்தினர்கள் "பிரிதிவிராஜ்" என்னும் தமிழ்நாடகக்கதை நடித்து காட்டி எல்லோரும் புகழும்படிச் செய்தனர். இவ்வளவுக்கும் மூலபுருஷராகவிருந்து மாணவர்களுக்குத் தமிழில் ஊக்கந்தந்து மாணவரைத் தமிழில் தேர்ச்சிபெறச்செய்யும் எட்மாஸ்டர் ஸ்ரீமான் S. K. தெய்வசிகாமணி அவர்கள் தமிழபிமானம் மெய்யறிவுடையவராதல் விரும்பத் தக்கதேயாகும். இதுவும் நமது திரிசிரபுரத்துக்கு நல்லகாலமே.

***

**"புதுப்பத்திரிகை"** எஸ். பி. ஜி. கலாசாலை மாகசீன் ஒன்று முன்னமே நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது ஐஸ்கூல் எட்மாஸ்டர் ஸ்ரீமான் S. K. தேவசிகாமணி அவர்கள் நன்முயற்சியாலும் விடாமுயற்சியாலும் ஐஸ்கூல்பேர் தாங்கி ஒருமாகசீன் வெளியாகப்போகிறது. எப்ரல் மாதத்திருந்து வெளியாம். இதுபோன்ற முயற்சிகள் நமது நாடு முன்னுக்குவருதற்கு ஏற்றதன்றோ? நம்பிள்ளைகள் மிக்கராதற்கு இதுவே தக்க செயல்களாம்.

***

**"பூவாளூர் சைவசித்தாந்தசபை."** இதன் இரண்டாவது வருஷ பூர்த்தி வெகு விமரிசையாக நடந்தேறியது, நாலுநாள் அதிகபொருட் செலவுசெய்து நடத்தினர். பல இடங்களிலிருந்து புலவர்களை வருவித்துப் பிரசங்கிக்கச் செய்தனர்.

காஞ்சீபுரம் வித்துவான் ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். இதுபோல் ஒவ்வொரு ஊரிலும் நடைபெறினன்றோ தமிழுஞ்சமயமும்பெருகும், நம்மவர் உய்வதற்குவழியாம்.

***

**"பீமன்! பீமன்!!"** புரபெசர் ராமமூர்த்தி என்னும் தற்கால பீமன் நமது திரிசிரபுரத்தில்வந்து தமது அருமைப்பலத்தின் சாதுரியத்தை எமது திரிசிரபுரவாசிகள் கண்டு களிக்கச் செய்கிறார். இவர் பலநாட்டரசர்களால் மெச்சப்பெற்றுத் தங்கப் பதக்கம் (மெடல்) பெற்றிருக்கிறார். இவர்செய்யும் அற்புதங்கள் கண்ணால் கண்டவர்கள் எல்லோரும் பிரமிக்காதவர்கள் இல்லை. இக்காலத்தில் இப்படி யிருக்கும் போது முன்காலத்திலுள்ள புராண கதைகளை ஏன் நம்பக்கூடாது. இதைக்கண்ட பின்னராகிலும் நமது ராமாயண பாரத கதைகளை நம்புவர்களென்று நம்புகின்றோம். இவர் ஆடல்காட்டிப்பெற்றுள்ள மெடல் நூற்றுக்கணக்காயிருக்கின்றன. இவரை ஐரோப்பியசாண்டோவிலும்

அறிவவிமை யுடையவர் என்கின்றனர்கள். இது நமது இந்தியாவிற்கு ஒரு பெரும் பெருமையே.

***

**"காலரா."** ஐயோ திரிசிரபுரத்தில் வெயில் அயில்போற்பாய்ந்து உடற்றுகின்றது. ஆற்றுநீர்மாற்றுநீராயிற்று. ஊற்றுநீரும் ஊருவதரு மையாயிருக்கிறது. தண்ணீர் கண்ணீரே. மக்கள் விண்ணீரின்றி வெதும்புகின்றனர். பம்புக்குழாய்களெல்லாம் வம்புக்குழாய்களாயிருக்கின்றன.

***

**"ஒரு நாயை விழுங்கிய மலைப்பாம்பு."** கல்கத்தாநகரத்தின் ஒரு வீதியில் சென்றமாதம் ஆதிவாரத்தில் விடியற்காலத்தில் 12-அடி நீள முள்ள ஒருமலைப்பாம்பு அங்கு கட்டப்பட்டிருந்த வாராவதியின்றுகி லுள்ள ஸட்ராண்ட் தெருவில் ஒருநாயைக் கொன்று விழுங்கிக்கொண்டிருப்பதை சிலவழிப்போக்கர்கள்கண்டு அப்பாம்பைச் சுட்டுக்கொன்றனராம்.

***

**"ஆகாயரதத்தால் (airship) தப்பின வொருவன்."** மாரியஸ்டேவால்என்றொரு டச்சுக்குற்றவாளி சிறைச்சாலையைவிட்டு எப்படியோ வெளிவந்து ஒரு இடத்தில் ஆகாய ரதத்தை வைத்துக் கொண்டிருந்த தன் சகோதரனோடு அதிலேறிப்பறந்து அடுத்த தேசத்திலிறங்கி அவ்வியந்திரத்தைப் பூட்டுப்பூட்டாய்க்கழற்றி பிரான்சுக்கு அனுப்பிவிட்டு இருவரும் மோட்டர் வண்டியில் போய்விட்டனராம்.

***

**பலவானும் தர்மவானும்:**—தற்கால பீமசேனனென விளங்கும் ஸ்ரீமான் புரபொசர் ராமமூர்த்தி அவர்கள் உலகத்துத் தனக்கிணையில்லாப் பலம் படைத்ததுபோல வள்ளற் றன்மையும் படைத்திருத்தல் காண எமக்கு மிக வியப்பைத்தருகிறது. ஒரு நாள் தன் ஆட்டத்தில் வந்த தொகையிற் பாதியை திரிசிரபுரம் நாஷனல் ஐஸ்கூலுக்கு இனமாகக் கொடுத்தனர். தானே நேரில் அந்த ஐஸ்கூலைப்போய்ப் பார்த்து மாணுக்கர்களுக்கு மிக்க பயன் தரத்தக்கதும் மற்றயர்க்கும் நனி பயன் தரத்தக்கதுமான அருமைப் பிரசங்கம் தேகாப்பியாசம் மனோ அப்பியாசம் முதலியவற்றைப்பற்றியும் உட்கொள்ளும் சுத்த போஜனத்தைப்பற்றியும் கேட்பவருக்குப் புலப்பட்டு பயன் செய்யுமாறு ஆங்கிலத்தில் அதி அழகாகப்பேசினர்.

தத்துவ ஆராய்ச்சி தெய்வபக்தி நற்குணம் நல்லொழுக்கம் இணையில்லாத் தேகவன்மை அஞ்சா ஈகை முதலியவும் இன்னும் சொல்ல எல்லா நல்ல குணங்களும படைத்த இவர்போல் ஒருவரைக் காண்ப தருமையே. இவர் நமது பாதகண்டத்திற்கு ஒரு அரும் பெருமணியே. இவர் நெடுநாள் தேகதிடம் தேகசுகம் முதலிய குறையாது எல்லாச் சுகமும் பெற்று வாழ்ந்திருக்க எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

**பத்திராதிபர்.**

**வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபடுத்துவத்தையும்**

**திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான**

இரண்டு உயர்ந்த ரத்னவுஷதங்கள்.

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

"நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன:

2. இரத்தத்தை சுத்திகரித்து, விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் படுத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருபவை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கற்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## நபும்ஸகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்ச்சிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய மூண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கானநற்சாக்ஷிபத்திரங்கள் நாங்கள் தேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனாமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

## ராஜவைத்திய நாராயண்ஜி கேசவஜி.

ப்ரொப்ரைட்டர் ஆயுர்வேதோதய ஔஷதசாலா,

No. 177, கைஞ்பஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

EMPIRE OF INDIA LIFE ASSURANCE Coy. (Ltd.)

**BOMBAY.**

Advantages: Purely Indian; Absolute Government Security: Premiums lower than English or Foreign Companies; High Surrender Values; Loans 6%; Quick settlement of claims &c

Please Apply to:—

J G GNANADURAI,

S/o Mr. J. GNANAMUTHU B A.

Puthoor, Trichinopoly.